# கருவலகஸ்வெவ பிரதேச சபை

## புத்தளம் மாவட்டம்

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 ஆகஸ்ட் 24 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 நவம்பர் 07 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 அபிப்பிராயம்**

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, கருவலகஸ்வெவ பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கருவலகஸ்வெவ பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

இபலோகம நீர் செயற்திட்டத்தின் பூர்த்தி செய்யப்பட்ட வேலைப் பெறுமதி ரூபா 27,234,086 கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,146,077 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,845,183 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 15,523,553 ஆக இருந்ததுடன் அதில் 01 வருட காலத்தை விஞ்சிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,731,769 ஆக இருந்தது.

(ஆ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,502,255 ஆக இருந்ததுடன் ஒரு வருட காலத்தை விஞ்சிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 965,460 ஆக இருந்தது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 200 | 132 | 68 |
| (ii) | வாடகை | 555 | 414 | 141 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 640 | 380 | 260 |
| (iv) | ஏனைய வருமானம் | 5,665 | 2,601 | 3,064 |
| (v) | ஆணைச்சீட்டுக் கட்டணம் மற்றும் தண்டப்பணம் | 2,580 | 1,249 | 1,331 |
| (vi) | ஏனைய வருமானம் | 1,280 | 119 | 1,161 |

### 2.3.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத்தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிராததுடன் மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டுப் பெறுமதி கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதி மன்றத் தண்டப் பணம் | 1,500,000 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 1,000,000 |

**2.3.3 ஏக்கர் வரி**

பிரதேசத்திலுள்ள நாளாந்தம் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் 1 ஹெக்டேயருக்கு குறைவற்ற அல்லது இதற்கு மேற்பட்ட அளவிலான காணியிலிருந்து ஏக்கர் வரி அறவிடப்பட வேண்டிய போதிலும் பிரதேச சபையால் ஏக்கர் வரி அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய பௌதீக வளங்கள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டவாறு சபையிடம் காணப்பட்ட ரூபா 3,568,943 பெறுமதியான காணி ஒன்றும், உத்தியோகபூர்வ இல்லமும், 05 கடைகளும், 05 வாகனங்களும் 02 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக விளைவற்றும் குறைவான பயன்பாட்டுடனும் காணப்பட்டன.

**2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

(அ) கொள்வனவு நடைமுறைகளுக்கு முரணாக சபையின் வீதித் தொழிலாளியால் தலைவரின் தேவைப்பாட்டில் சபையில் பதிவாகியிராத வழங்குனரிடமிருந்து ரூபா 23,925 தொகையான வீதி விளக்குகள் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் போது சபை நிதியம் ரூபா 86,592 செலவிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருந்த தப்போவ தேவாலயம் முதல் உப தபால் அலுவலகம் வரை 3936 அடி நீள நீர்க் குழாய் வளியை நீடித்தல், போதிய நீர்சுழற்சி இன்மையால் 2013 ஆகஸ்ட் வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட முடியாதிருந்த தோல்வியடைந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமாகியிருந்தது.

(இ) மாகாண நிர்ணய அபிவிருத்தி மானியம் ரூபா 1,200,000 செலவிடப்பட்டு 2011 ஆம் ஆண்டின் போது வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்த முனமல்கஸ்வெவ நீர்த் தாங்கி நிர்மாணிப்பு 2012 திசெம்பர் வரை வேலை முடிவுறுத்தப்பட முடியாதிருந்ததுடன் 2013 ஆகஸ்ட் மாதம் வரையிலும் பிரதேச மக்களுக்கு நீர் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2011 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2012 ஆம் ஆண்டின் போது எரிபொருள் அலகுப் பயன்பாடு 54% ஆல் உயர்வடைந்திருந்ததுடன் எரிபொருள் செலவினம் 128% ஆல் உயர்வடைந்திருந்தது. தலைவர் பயன்படுத்திய கப் வண்டியின் எரிபொருள் அலகுப் பயன்பாடு 2011 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 75% ஆல் உயர்வடைந்தமையும் செலவினம் 172% ஆல் உயர்வடைந்தமையும் விசேடத்துவத்தைக் கொண்டிருந்தது.

(உ) சபையால் 2011 ஆம் ஆண்டின் போது நிர்மாணிப்பு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த கொங்கிரீட் சிறுகற்கள் தொழிற்சாலையின் மூலம் மீளாய்வாண்டின் போது எவ்வித உற்பத்தியும் மேற்கொள்ளப்படுவதற்கு முடியாதிருந்தது.

(ஊ) சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் குப்பைகூளப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக கழிவு முகாமைத்துவம் தொடர்பாகக் கவனம் செலுத்தப்படுவதற்கு சபையால் எவ்வித முயற்சியும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 இபலோகம நீர் செயற்திட்டம்

உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் முழுமையான கண்காணிப்பில் ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன், உதவி மற்றும் சபைப் பங்களிப்பு போன்ற ஒதுக்கீட்டு மூலங்களின் பங்களிப்பில் இபலோகம பகுதியில் நீர்ச் செயற்திட்டம் ஒன்று ரூபா 26,275,580 தொகை ஏற்கப்பட்டு மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்பட்டிருந்தது. கீழே 2013 சனவரி 24 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக ஆய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 சனவரி 04 ஆம் திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. நிர்மாணிப்பு நடவடிக்கைகள், தாமதமானதை அடுத்து 2012 யூலை 12 ஆம் திகதி வரை செயற்திட்டக் கையளிப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நீர்த் தாங்கி மொத்தக் கொள்ளளவிற்கு நீர் நிரப்பப்படுகையில் அதன் பல பகுதிகளிலிருந்தும் நீர்க் கசிந்த வண்ணம் காணப்பட்டது.

(இ) கிணற்றிலிருந்து இயந்திரஇயங்கும் இடம் வரையான 31 அடி அளவிலான திறந்த பகுதியில் 4'' பீவீசீ குழாய் பயன்படுத்தப்பட்டிருந்தது. கிணறு தரை மட்டத்திலிருந்து பல பகுதிகளில் நீர்க் கசிவடைதல் மற்றும் வெளியில் விவசாய இரசாயனப் பொருட்கள் கலக்கும் நீர் கிணற்றிற்குக் கசிவடைதல் காணக்கூடியதாக இருந்தது.

(ஈ) இபலோகம நீர் செயற்திட்டம் நிர்மாணிக்கப்படுகையில் 20% முற்பணம் உள்ளடங்கலாக 5 கொடுப்பனவுச் சந்தர்ப்பங்களின் போது ரூபா 26,275,579 தொகையான ஒப்பந்தம் நிறுவனத்திற்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் இவற்றில் ஒரு கொடுப்பனவின் போது அல்லது 10% ஆன பிடிமானங்கள் பிடித்து வைக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு பிடித்து வைக்கப்பட்ட தொகையாக ரூபா 2,627,558 காணப்பட்டது.

## 2.8 உள்ளகக் கணக்காய்வு

நிறுவகத்தில் போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்து முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்தக் கட்டுப்பாடு
(உ) வாகனக் கட்டுப்பாடு